# தமிழ் அருங்காட்சியகம் இலண்டன்
# TAMIL MUSEUM LONDON

தமிழ் அருங்காட்சியகம் இலண்டன் ஆங்கில ஆண்டு முதலாம் திகதி கார்த்திகை மாதம் 2019 இல் பிரித்தானிய அரசின் தனியார் மற்றும் சமூக அமைப்புக்களை பதிவு செய்யும் நிறுவனத்தில் (company house) பதிவு செய்யப்பட்டது.

தமிழ் அருங்காட்சியகம் இலண்டன் எனும் கருத்துருவாக்கம் இதற்கு சில மாதங்களுக்கு முன்னரே பின்வரும் ஆர்வலர்களால் உருவாக்கப்பட்டது

1. திருமதி இ.இரஞ்சனா
2. முனைவர் மு. கோ. சிறீகாந்தன்
3. திரு சி.சுபாஸ்கரன்
4. வைத்தியர் சு.இரத்திரனேஸ்வரன்
5. திரு வி.போஸ்
6. திருமதி இ.சாந்தினி
7. திரு சி.சிவராஜா
8. திரு சி.மணி
9. திரு கு.ரேமியன் ரூபராயன்

கொரோனா பெருந்தொற்றின் காரணமாக ஐக்கிய இராச்சியத்தில் நாளாந்த வேலைகள் முடக்கப்பட்டிருந்த வேளையில் இவ் அருங்காட்சியக கருத்துருவாக்கம் மெய்நிகர் அருங்காட்சியகமாக உருவாக்கும் வேலைத்திட்டத்தை திருமதி இ.இரஞ்சனா, முனைவர் மு. கோ . சிறீகாந்தன், திரு. கு. ரேமியன் ரூபராயன் ஆகியோரால் முன்னெடுத்து செல்லப்படுகின்றது. இருப்பினும் தமிழ் அருங்காட்சியகம் இலண்டனின் இறுதி இலக்கு ஒரு நிரந்தர அருங்காட்சியகத்தை இலண்டன் மாநகரில் நிறுவுவதே ஆகும்.

அருங்காட்சியகத்தின் தற்போதைய வேலைத்திட்டங்கள் :

1. **இணைய வழிக்கருத்தரங்குகளை நாடாத்துவது**. இதன் முதலாவது கருத்தரங்கு 2020 கார்த்திகை மாதம் இரண்டாவது சனிக்கிழமையன்று ஆரம்பிக்கப்பட்டது அன்றிலிருந்து ஒவ்வொரு மாதமும் இரண்டாம் சனிக்கிழமை காலை 11.00 மணியில் இருந்து 1.00 மணி வரை நடாத்தப்பட்டு வருகின்றது.

Thulasi, Bridge end close, KT2 6PZ Kingston upon Thames, UK

+44 20 3667 3730 admin@tamilmuseumlondon.org.uk http://www.tamilmuseumlondon.org.uk/

@tamilmuseumlondon

2. **மெய்நிகர் அருங்காட்சியக காட்சி அறைகளை உருவாக்குவது** 2021ஆம் ஆண்டு ஆடி மாதம் 31 ஆம் திகதி மெய்நிகர் அருங்காட்சியகத் திறப்பு நிகழ்வு சிறப்பாக நடந்தேறியது அன்று ஆறு காட்சித்தளங்கள் உருவாக்கப்பட்டு வெளியிடப்பட்டன. புதிய காட்சி அறைகள் தொடர்ந்தும் உருவாக்கப்பட்டு வெளியிடப்பட்டுக் கொண்டு இருக்கின்றன. இந் நிகழ்வில் துறை சார் பேராசிரியர்கள் உலகின் பல பாகங்களிலும் இருந்தும் வந்து வாழ்த்துரை வழங்கினர்.

**அருங்காட்சியகத்தின் நோக்கம்**

தமிழ் மொழியின் தொன்மை , மரபு, பண்பாடு, வாழ்வியல், வரலாறு மற்றும் அரசியல் தகவல்களை

1. உலகளவில் அணுகக் கூடியதான ஒரு தளத்தை நிறுவுதல்
2. எல்லோருக்கும் விளங்கும் வகையில் எளிமையாக ஆனால் உண்மைத்தன்மையும் பொருளும் மாறாமல் காட்சிப்படுத்தல்
3. இத்தளத்தை உலகத்தரம் வாய்ந்த ஒரு நிறுவனமாக வளர்த்தெடுத்தல்,
4. வளர்த்து எடுக்கப்பட்ட இத்தளத்தை அடுத்த தலைமுறையினருக்கு அறியத்தருவதுடன், அவர்களிடம் இத்தளத்திற்கான தேவை யையும், அதன் செயற் திட்டங்களையும் ஒப்படைத்தல்

அருங்காட்சியகத்தின் கனவு

**"தமிழை அறிவோம் தமிழால் இணைவோம்"**

Thulasi, Bridge end close, KT2 6PZ Kingston upon Thames, UK
+44 20 3667 3730 admin@tamilmuseumlondon.org.uk http://www.tamilmuseumlondon.org.uk/
@tamilmuseumlondon